# வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர். S. ஜெய்சங்கர் அவர்களின் உகாண்டா மற்றும் நைஜீரியாவின் பயணம் (ஜனவரி 19-23, 2024)

ஜனவரி 18, 2024

வெளியுறவுத் துறை அமைச்சர் (EAM), டாக்டர். S. ஜெய்சங்கர் அவர்கள் 2024 ஜனவரி 19-20 ஆகிய தேதிகளில் உகாண்டாவின் கம்பாலாவில் நடைபெறவுள்ள கூட்டமைப்பற்ற நாடுகள் இயக்கத்தின் (NAM) 19 வது உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகளை வழிநடத்துவார். இந்த உச்சிமாநாட்டிற்கு முன்னதாக அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் மட்டத்தில் ஆலோசனைகள் நடைபெறும். வெளியுறவுத் துறை இணை அமைச்சர் டாக்டர். ராஜ்குமார் ரஞ்சன் சிங் அவர்கள் NAM உச்சி மாநாட்டிற்கு முன்னதாக நடைபெறவுள்ள மாநாடு கூட்டமைப்பின் NAM வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியாவின் சார்பில் பங்கேற்கிறார். மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு. V. முரளிதரன் அவர்கள் 2024 ஜனவரி 21-22 ஆகிய தேதிகளில் கம்பாலாவில் நடைபெறவுள்ள G-77 மூன்றாவது தெற்கு உச்சி மாநாட்டில் இந்தியாவின் சார்பில் பங்கேற்கிறார்.

2. உகாண்டாவின் தலைமையில் நடைபெறும் 19 வது NAM உச்சி மாநாட்டில் 'உலகளாவிய செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் ஒத்துழைப்பை ஆழமாக்குதல்' என்ற கருப்பொருளின் கீழ், 120 க்கும் மேற்பட்ட வளரும் நாடுகளை ஒருங்கிணைத்து, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மேடையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. இந்த NAM இயக்கத்திற்காண உகாண்டாவின் கருப்பொருளை இந்தியா முழு மனதுடன் ஆதரித்து உகாண்டாவின் தலைமையின் கீழ் இந்த NAM இயக்கத்துடன் இணைந்து செயல்பட இந்தியா எதிர்நோக்குகிறது. NAM இயக்கத்தின் முன்னணி மற்றும் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராக, இந்த இயக்கத்தின் கொள்கைகள் மற்றும் மதிப்புகளுக்கு இந்தியா தொடர்ந்து உறுதியளித்து வருகிறது.

3. NAM உச்சிமாநாட்டின் போது, EAM உகாண்டா தலைமை மற்றும் NAM உறுப்பு நாடுகளின் சகாக்களை சந்திபார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. 2024 ஜனவரி 21-23 ஆகிய தேதிகளில் நைஜீரியாவுக்கு EAM அதிகாரப்பூர்வ அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். இதில் இந்தியா-நைஜீரியா கூட்டு ஆணையத்தின் (JCM) ஆறாவது கூட்டத்திற்குத் EAM இணைத் தலைமை தாங்கி, மற்ற தலைவர்களைச் சந்திக்கிறார். நைஜீரியா-இந்தியா வர்த்தக கவுன்சில் கூட்டத்தின் மூன்றாவது பதிப்பைத் EAM தொடங்கிவைத்து சர்வதேச விவகாரங்களுக்கான நைஜீரிய நிறுவனத்தில் உரையாற்றுவதுடன், CII வர்த்தக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையை திறந்து வைக்கிறார். இந்திய தூதரகத் தலைவர்களின் மண்டல மாநாட்டிற்கும் அவர் தலைமை தாங்குகிறார். இந்தியாவும் நைஜீரியாவும் பாரம்பரியமாக நெருக்கமான நட்புறவைக் கொண்டுள்ளது. இது நைஜீரியாவுக்கு EAM இன் முதல் பயணம் ஆகும். இது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும்.

**புது தில்லி**
**ஜனவரி 18, 2024**